


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (18.3.2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு சட்டப்பேரவை பொதுத்தேர்தலில் மதுரை, தேனி, விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாக போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களுடன் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

# உழைப்போர் உரிமை இயக்கம் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு!



**சென்னை, மார்ச் 20-**

**முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து உழைப்போர் உரிமை இயக்கத்தின் மாநில நிர்வாகிகளான ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநில தலைவர் கு.பாரதி, பொதுச்செயலாளர் எஸ்.ஜானகிராமன், செயலாளர் கே.சுரேஷ், பொருளாளர் பி.நாகராஜ், மாவட்ட இணை அமைப்பாளர்கள் எஸ்.யுவராஜ், எம்.உமார்பாரூக் ஆகியோர் வரும் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.**

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.03.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் உழைப்போர் உரிமை இயக்கத்தின் (UUI) மாநில நிர்வாகிகளான ஆலோசகர் எஸ்.குமாரசாமி, மாநில தலைவர் கு.பாரதி, பொதுச்செயலாளர் எஸ்.ஜானகிராமன், செயலாளர் கே.சுரேஷ், பொருளாளர் பி.நாகராஜ், மாவட்ட இணை அமைப்பாளர்கள் எஸ்.யுவராஜ், எம்.உமார் பாரூக் ஆகியோர் நேரில் சந்தித்து சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களை, மாநகராட்சியில் மீண்டும் பணியமர்த்திமைக்கு நன்றி தெரிவித்ததோடு எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், மதச்சார்பின்மை மற்றும் மாநில உரிமைகளுக்காக தி.மு.கழகத்திற்கும் – அதன் கூட்டணிக்கட்சிகளுக்கம் தங்கள் ஆதரவை தெரிவித்தனர். அதுபோது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு உடனிருந்தார்.



திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மண்டலப் பொறுப்பாளர், உணவு மற்றும் உணவு பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கழக மகளிர் அணி துணை செயலாளர், மனித வள மேலாண்மை துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கினர். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் – உயர்நீதிமன்றத்தின்

# பெண் வழக்கறிஞர்கள் உள்பட 160 வழக்கறிஞர்கள் கழகத்தில் இணைந்தனர்!

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



**சென்னை, மார்ச் 20-**

**முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், வழிகாட்டுதலின்படி சென்னை ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தின் பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், முன்னாள் எம்.எல்.ஏ. வழக்கறிஞர் பி.எச்.மனோஜ் பாண்டியன், வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (18.3.2026) மாலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பெண் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட ஜார்ஜ் டவுன் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்களான பி.விஜய குமார், டி.நந்த குமார், ஏ.சத்யா, சி.ராகவன், ஏ.டி.நாகேந்திரன், எஸ்.குணசேகரன், எம்.பெருமாள், ஜி.ஜெய்சிங்க, முத்துகுமரன், எஸ்.பாலாஜி, ரோட்டரி என்.சிவக்குமார், நிக்சன், திருமதி. அதிசயா, டி.பவித்ரா, பி.லீனா உள்ளிட்ட 160க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது, அமைச்சர் பி.கே.சேகர்பாபு, முன்னாள் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் பி.எச்.மனோஜ்பாண்டியன், தி.மு.க. சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை, வழக்கறிஞர் திருமாறன், வழக்கறிஞர் ஆர்.வி.பாபு ஆகியோர் உடனிருந்தனர்.

### கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க

# ஒன்றிய அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

*புதுடெல்லி, மார்ச் 20-*

*திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் அவர்கள் 16 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் ஒன்றிய அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டங்கள் பரிசீலனையில் உள்ளதா? என்றும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு விதிகள் 2025ன் படி அகழாய்வு முதலீட்டை பெருக்க, ஒன்றிய அரசு முயற்சி எடுக்குமா? என்றும், இயற்கை வாயு விநியோகத்தை அதிகப்படுத்த அரசின் கட்டமைப்புகளை அதிகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் பெட்ரோலியத்துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி அவர்களிடம்*



*கேள்வி எழுப்பினார்.*

*இதற்கு ஒன்றிய அரசின் பெட்ரோலியத்துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-*

*உற்பத்தி குறைந்து வரும் கச்சா எண்ணெய் வளத்தை அதிக்படுத்தும் வகையிலும் 100 சதவீத வெளிநாட்டு முதலீட்டினை ஈர்க்கும் வகையிலும், எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கழகத்துடன்(ஓஎன்ஜிசி) இணைந்து பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தின் உதவியுடன், கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க, ஒன்றிய அரசு தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்றும், எண்ணெய் அகழாய்வு துறையில் முதலீட்டை அதிகரிக்கும் வகையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு 2025 கடந்த டிசம்பர் மாதம் முதல் அமலுக்கு வந்துள்ளது.*

*பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு விதிகள் 2025ன் படி 180 நாட்களுக்கும் தேவையான அனுமதிகள் தனியார் துறைக்கு வழங்கப்படும் என்றும் 30 ஆண்டுகால பெட்ரோலிய குத்தகைக்கு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என்றும், இதற்கு தேவையான சட்ட சீர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*மேலும் 25,929 கிலோ மீட்டர்கள் அளவிற்கு குழாய்கள் மூலம் இயற்கை எரி வாயு வழங்கப்படுகிறது என்றும், இதற்கான கட்டமைப்பில் 8,616 சிஎன்ஜி நிலையங்களும் 1,62,00,000 பெட்ரோலியம் நிலையங்களும் அமைக்கப்பட்டு விநியோகம் நாடு முழுவதும் சீராக கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்றும், வடகிழக்கு மாநிலங்களில் 4,670 கிலோ மிட்டர்கள் அளவிற்கு எரிவாயுக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், ஒன்றிய அரசின் பெட்ரோலியத் துறை இணையமைச்சர் சுரேஷ் கோபி அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு பதிலை அளித்துள்ளார்.*



திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சூரியூர் ஊராட்சி சின்ன சூரியூர் கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலன் கருதி புதிதாக கட்டி முடிக்கப்பட்ட ரூ.52 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டிலான வகுப்பறை கட்டிடங்களை மாணவர்களின் பயன்பாட்டிற்காக அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். மேலும் இதே போல் கீழ முல்லக்குடி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட அரசு நடுநிலைப் பள்ளியில் ரூ.52 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பீட்டிலான கட்டி முடிக்கப்பட்ட புதிய வகுப்பறைகளை பள்ளிக் குழந்தைகளின் பயன்பாட்டிற்காக தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திறந்து வைத்தார். மேலும் இந்நிகழ்வில் திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கருணாநிதி, தெற்கு ஒன்றிய செயலாளர் கங்காதரன், திருவெறும்பூர் தாசில்தார் கார்த்திகேயன் உட்பட மாவட்ட கல்வி அலுவலர், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.